# சிற்பக்கலை

# Sculpture

***முனைவர் தே. நாகலெட்சுமி***
இணைப் பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம்
தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்

**Dr. D. Nagalakshmi**
*Associate Professor, Tamil Arts Research*
*Hindu College, Nagarcoil*

## ஆய்வுச் சுருக்கம்

*சிற்பக்கலை கண்ணையும் கருத்தையும் கவர்ந்து மனத்திற்கு இன்பம் கொடுக்கும் இனியகலைகள். அவற்றின் அழகு மிக நுட்பமானது. இதன் அமைப்பு எல்லோருக்கும் உணர்ச்சியை கொடுத்து மகிழ்வூட்டுகின்றன. இக்கலை அச்சு வார்ப்பு கலையாகவும் காணப்படுகின்றன. இச்சிற்பங்கள் உலோகத்தாலும், கல்லினாலும் உருவாக்குவதாகும். இக்கலை சமயத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சிப் பெற்றிருக்கிறது. தெய்வ உருவங்கள் நமது நாட்டு சிற்பக்கலையில் முதன்மை பெற்றுள்ளன. இவ்வடிவங்கள் தவிர விலங்குகள், இலைகள் கொடிகள், பறவைகள் இயற்கைகள், வரலாற்று சான்றாதாரங்கள் என வடிவமைத்துள்ளனர். வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இக்கலை வளர்ந்து வருகின்றது.*

***முக்கியச் சொற்கள்:*** *பிரதி, படுகொலை, அச்சு வார்ப்பு, அரக்கு*

## Abstract

*Sculpture attracts the eye and the mind and gives pleasure to the mind. Their beauty is very subtle and the structure gives pleasure to everyone. This art is also known as the art of mold casting. These sculptures are made of metal and stone. This art has developed on the basis of society. Deity figures have taken precedence in our country's sculpture. Apart from these forms, animals, leaves, vines and birds are also designed. This art has been growing since prehistoric times.*

***Keywords:*** *Replica, Slaughter, Mold casting, Lacquer*

**Citation**

Nagalakshmi, D. "Sculpture." *Journal of Tamil Culture and Literature*, vol. 3, no. 3, 2024, pp. 24–28.

**முன்னுரை**

*சிற்பக்கலைகள் கண்ணையும் கருத்தையும் கவர்ந்து மனத்திற்கு இன்பம் கொடுக்கும் இனிய கலைகள் அவற்றின் அழகும் அமைப்பும் எல்லோருக்கும் உணர்ச்சியை கொடுத்து மகிழ்வூட்டுகின்றன. சிற்பங்கள் தமிழரின் அழகியலையும் மரபையும் நுட்பங்களையும் காட்சிப் பொருட்களாக அச்சுவார்ப்பு கலையாக காணப்படுகின்றன. அரக்கு, சுதை, மரம், மெழுகு, தந்தம், பஞ்சலோகம், நவபாஷாணம், கல் ஆகியவற்றில் சிற்பங்கள் செய்யப்படுகின்றன. உலோகத்தினாலும், கல்லினாலும் அமைக்கப்பட்ட சிற்பங்களை பிரதிமை உருவங்கள் என்பர். இவ்வுருவம் சிலை வடிவம் போல் உருவாக்குவதாகும்.*

***கல்லும் உலோகமும் செங்கோலும் மரமும்***
***மண்ணும் சுதையும் தந்தமும் வண்ணமும்***
***கண்ட சருக்கரையும் மெழுகும் என்றிவை***
***பத்தே சிற்பத் தொழிற் குறுப்பாவன***

*என்கின்றன திவாகர நிகண்டு. இவ்வாறு வடித்த சிலைகள் பலவற்றை மனிதர்கள் மெய் மறந்து பார்க்கின்றனர்.*

**சிற்பிகளும் சிற்பங்களும்**

*தமிழகத்தில் சிற்பங்களை வடித்த சிற்பிகள் தெய்வ உருவங்களை உருவாக்கும் போது சில நெறிமுறைகளைக் கடைப்பிடித்தார்கள். மனிதர்களைப் போல எலும்பும் நரம்பும் தசையமைப்பும் கொண்டவர்களாகத் தெய்வங்களை வடிக்கப் பெறுவதில்லை படைப்பதில்லை.*

*நான்கு கைகள் ஆறுவகைகள் பன்னிரண்டு கைகள் ஆறுமுகங்கள் யானைத்தலை போன்ற வேறுப்பட்ட வடிவங்களில் கலைநுட்படங்கள் வெளிப்படத் தெய்வ உருவங்களைப் படைக்கின்றனர். சிற்பங்களிலே ஆடை அணிகலன்கள் பூணுல் ஆகிய அமைந்திருக்கும் வகையில் சிற்பங்கள் வடிக்கப் பெறுகின்றன.*

*சிற்பிகள் அழகியல் மற்றும் உடல்கூறு இலக்கணங்களைப் பயின்றவர்களாக இருந்தனர். சிற்பிகளுக்கென்று தனி இலக்கண நூல்களும் பயிற்சி முறைகளும் இருந்தன. மயன் எனும் தெய்வ சிற்பி இருந்ததாகவும் அவன் பல அரிய சிற்பங்களை உருவாக்கி இருப்பதாகவும் உயர்ந்த பல கட்டடங்களை எழுப்பியதாகவும் தமிழ் இலக்கியங்கள் கூறுகின்றன. சிற்பக்கலையின் பெருமையை திருமந்திரம்.*

***மரத்தை***
***மறைந்தது மாமத***
***யானை***
***மரத்தில் மறைந்தது***
***மாமத யானை*** ***(திருமந்திரம். 2290)***

*என கூறுகிறது.*

**இரண்டு வகை சிற்பம்**

*சிற்ப உருவங்களை முழு உருவங்கள் என்றும் படைப்புச் சிற்பங்கள் என்றும் இரண்டு விதமாகப் பிரிக்கலாம். முழு உருவச்சிற்பம் என்பது பொருள்களின் முன்புறம் பின்புறம் முதலிய முழு உருவம் தெரிய அமைக்கப்படுவது புடைப்புச் சிற்பம் என்பது பொருள்களின் ஒரு புறம் மட்டும் தெரியும்படி சுவர்களிலும் பலகைகளிலும் அமைக்கப்படுவது இவ்விரண்டுவிதச் சிற்ப*

*உருவங்களும் கோயில்களிலே அமைக்கப்படுகின்றன. உலோகத்தால் செய்யப்பட்ட தெய்வ திருமேனிகள் பலரும் கோயில்களில் இடம் பெற்றிருக்கின்றன. நமது நாட்டுச் சிற்பக்கலை சமயத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ச்சி பெற்றது.*

**தெய்வ உருவங்கள்**

*சைவ, வைணவச் சிறிய உருவங்களை ஆதி. காலத்தில் மரத்தினாலும் சுதையினாலும் பஞ்சலோகத்தினாலும் செய்து அமைத்தார்கள். மரத்தினாலும் சுதையினாலும் செய்யப்பட்ட தெய்வ உருவங்கள் சில கோயில்களில் உள்ளன. உத்தரமேரூர் சுந்தரவரதப் பெருமாள் கோயிலுள் தெய்வ உருவங்கள் மரத்தினால் செய்யப்பட்டவையே திருவல்லிக்கேணி பார்த்த சாரதிப் பெருமாள், காஞ்சி பாண்டல தூதப் பெருமாள், மகாபலிபுரத்துத் தலசயனப்பெருமாள். திருவிடந்தை வராகப் பெருமாள் முதலிய கோயில்களில் உள்ள உருவங்கள் சுதையினால் ஆனவையே.*

***மண்ணினும் கல்லினும் மரத்தினும் சுவரினும்***
***கண்ணிய தெய்வதம் காட்டுநார் வகுக்க***

*என்று மணிமேகலைக் காவியம் கூறுகிறது.*

*கி.பி. 7ஆம் நூற்றாண்டில் கருங்கல்லினாலும் பஞ்சலோகத்தினாலும் சிற்ப உருவங்கள் உண்டாக்கப்பட்டது. பல்லவன அரசரும் பிற்கால சோழரும் இவற்றினாலே சிற்பங்களை அமைத்தார்கள். சிவன், திருமால் முதலிய தெய்வங்கள் மனித உருவம் போலவே இருப்பதை காணமுடிகிறது. அந்த உருவச் சிலைகள் எலும்பு, சதை நரம்பு முதலியவை அமைந்த மானிட உருப்புள்ள தெய்வ உருவங்களாக சமைக்கப்படுவதில்லை.*

**சிற்பக் கலையின் சிறப்பியல்புகள்**

*தமிழ் நாட்டுச் சிற்பங்கள் காட்சிப் பொருளாக மட்டும் இல்லாமல் காட்சிக்கு அப்பால் சென்று கருத்துக்களையும் உணர்ச்சிகளையு ஊட்டுகின்றன. ஆடற்கலையின் இலக்கணங்களையும் காணமுடிகின்றது. சோழர் காலச் சிற்பங்கள் உலககெங்கும் உள்ள பொருட்காட்சியங்களில் இடம்பெற்றுள்ளன. சோழர் ஆட்சிக்காலத்தில் தான் சிற்பக்கலையும் வளர்ந்தன என்ற குறிப்புகள் காணப்படுகின்றன. தொடக்கத்தில் கோயில்கட்டுவதற்கு முதன்மை கொடுத்த சோழர்கள் பின் சிற்பங்கள் முதன்மைக் கொடுத்தனர். மீனாட்சி அம்மன் கோயில் ஆயிரங்கால் மண்டபம் பேரூர்பட்டிப் பெருமாள் கோயிலின் கனசபை இராமேஸ்வரம் தூண் சிற்பங்கள் போன்ற இடங்களில் நாயக்காலச் சிற்பங்கள் உள்ளன. பல்லவர் காலச் சிற்பங்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்குவது மாமல்லபுரத்தில் உள்ள ஒற்றப்பாறைச் சிற்பம் உலகப் புகழ் பெற்றதாகும். கட்டக்கலையும் சிற்பக்கலையும் நிறைந்த ஊர் கும்பகோணம் ஆகும். மனிதன் நாகரீகத்தையும் அதன் வளர்ச்சியும் எடுத்துக்காட்டும் சான்றுகளில் சிற்பக்கலையைவிட சிறந்தது வேறொன்றுமில்லை. சிற்பங்கள் வாயிலாக தொன்மை வரலாற்றை அறியமுடிகின்றது. ஆயற்கலை இலக்கணத்துடன் கலையுணர்வு கற்பனைத்திறன் கலந்து தெய்வ திருமேனிகள் நிறுவப்படும் இடத்துக்கு தக்கவாறு கலையழகை மட்டுமின்றி அவ்வடிவ அமைப்புகளின் உட்கருத்தையும் உணர்த்தும் வகையில் வடிவமைக்கப்பட்டிருக்கின்றன.*

*தமிழகத்தில் பல்லவர்களின் மாமல்லக்குகைக் கோயில் சிற்பங்கள் வரலாற்று புகழ்பெற்றவை பாண்டியர்கால சிற்பங்கள் தமிழகச் சிற்பங்களின் கலைத்திறனுக்குக் சான்றாய் விளங்குகின்றன. குடந்தை நாகேஸ்வர் கோயில் தஞ்சைப் பெரியகோயில்,*

*கங்கை கொண்ட சோழீச்சுரம், இராசராசனின் கலைப்படைப்பாய் எழுந்த தாராசுரத்து ஐராவதேசுவரர் திருக்கோயில் ஆகியவற்றிலுள்ள சிற்பங்கள் உலகப்புகழ் பெற்றவை. இவை சிற்பக்கலையின் வளர்ச்சியையும் அக்கலையில் தமிழகச் சிற்பிகள் பெற்றிருந்த பெருந்திறனையும் உலகுக்கு உணர்த்துகின்றன.*

**சிற்பத்தில் மறை பொருட்கள்**

*தெய்வ உருவங்கள் குறிப்பு பொருளைப் புலப்படுத்துகின்றன. கடவுளை சைவம் வைணவம் என திருவுருவத்தில் மறைபொருளாக அமைத்துக் காட்டியிருக்கிறார்கள். கடவுள் உருவங்களுக்கு நான்கு கைகள் அல்லது எட்டுக்கைகள் அமைத்துக் காட்டியிருக்கிறார்கள். திசைகளை நான்காகவும் எட்டாகவும் கூறுவது மரபு. பண்டை காலத்தில் அந்தந்த தெய்வங்களின் அடையாளங்களை மட்டும் வைத்து வணங்கினார்கள். முருகன் உருவத்தை வைத்து வணங்காமல் முருகனுடைய படையாகிய வேலை மட்டும் வைத்து வணங்கினார்கள். இந்திரனுடைய உருவத்தை வைத்து வணங்காமல் அவனுடைய வச்சிராயுதத்தை வைத்து வணங்கினார்கள். வெள்ளையானை, கற்பகத் தரு இவற்றின் உருவங்களை வைத்து வணங்கினார்கள். இதைத்தான் மேற்கோட்டம், வச்சிரக்கோட்டம், அமர்தருக் கோட்டம், வெள்ளையானைக் கோட்டம் என்று சிலப்பதிகாரம் கூறுகிறது. இதனால் அறியப்படுவது தெய்வ உருவங்கள் பண்டைக் காலத்தில் சிற்ப உருவங்களாக அமைக்கப்படவில்லை. பிற்காலத்தில் தான் அமைக்கப்பட்டவை என்பதனை அறிய முடிகிறது.*

*கி.பி. 14,15,16 ஆம் நூற்றாண்டில் விஜயநகர பேரரசர்கள் பலச் சிற்ப செழுமை வாய்ந்த மண்டபங்களைத் தோற்றுவித்துள்ளனர். விஜய நகர காலத்திற்கு முன்னர் தமிழகச் சிற்பங்களில் மாதர்களின் மார்பகங்கள் திறந்தே வடிவமைக்கப்பட்டுள்ளன, புடவையால் மூடப்பட்டிருக்காது. இவர்கள் காலத்திலிருந்துதான் புடவையைக் கொண்டு மறைந்த நிலையில் இருக்கின்ற சிற்பங்களை காண முடிகின்றன. இக்காலச் சிற்பங்களில் சிற்பத்தின் முகத்தில் எவ்வித உணர்வும் வெளிப்படவில்லை. மூக்கு கூர்மையாகவும் முகவாய்க்கட்டை செங்குத்தாகவும் செதுக்கப்பட்டுள்ளன. அடிவயிறானது வட்டமாகவும் சரிந்தும் காணப்படும். அக்கால சிற்பங்களில் "திரிவலி" என்று கூறப்படுகின்ற மூன்று நேர்கோடுகளை அடிவயிற்றிற்கு மேல் காணலாம். இக்காலத்தில்தான் நாமம் என்ற நெற்றிச் சின்னங்கள் தோன்றின.*

**வடிவ உள்ளடக்கம்**

*தமிழ் சிற்பக்கலையில் தெய்வ வடிவங்களைத் தவிர விலங்குகளின் வடிவங்களையும், இலைகள், பூக்கள், கொடிகள், பறவைகள் ஆகியவற்றை ஆராய்ந்து சிற்பிகள் அழகுறப் படைத்துள்ளனர். தெய்வங்களின் வடிவங்களைக் காட்டும்போது ஆடை அணிகலன்களை உடலோடு ஒட்டியவாறு அமைக்கின்றனர். இறையின் முகத்தைத் தீட்டும்போது சிற்பிகள் முகத்தை முழு மதியிலும் கண்களை மலர்களிலும் கூந்தலை மயிற் தோகையிலும் தொடையை யானையின் துதிக்கையாலும்கண்டு ஒப்பற்ற பொலிவுடன் கூடிய சிற்பத்தை அமைக்கின்றனர். பல்லவர் காலத்து சிற்பங்களில் திரிச்சிராப்பள்ளியின் குகைக் கோயிலும் மாமல்லபுரத்திலுள்ள சிற்பங்களும் மிகவும் புகழ் வாய்ந்தனவாகும். இதில் மகிஷாசுரமர்த்தினி சிற்பமும் அர்ச்சுனன் தவத்தைக் குறிக்கச் சிற்பமும் கோவர்த்தன மலையைத் தூக்கி கண்ணன் கோகுலத்தைக் காத்த சிற்பமும் சிறப்பு வாய்ந்தவை. சோழர்கால சிற்பங்களில் கங்கை கொண்ட சோழபுரத்து சிற்பங்களும் குடந்தை நாகேசுவரன் கோயில் சிற்பங்களும் சிற்பக்கலைக்கு எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன. வடிவக்கூறுகள் முக்கியமானவை வெளிபருண்மை, கொள்ளளவு, கோடு*

*இயக்கம், ஒளி, நிழல் பொருளின் புறத்தன்மை, நிறம், ஆழம், உயரம் ஆகியன தவிர ஏனை ஓவியத்திற்கும் பொருந்துமாயினும் சிற்பம் முப்பரிமாண படைப்பாக உள்ளது.*

**முடிவுரை**

*சிற்பக்கலையின் பொற்காலம் பல்லவர் காலத்திலிருந்தே தொடங்குகிறது. சிற்பங்கள் கண்ணையும் கருத்தையும் கவரக் கூடியவையாக அமைந்துள்ளன மனிதன் படைத்தக் கலைகளுள் மிகச் சிறந்தது சிற்பக்கலை. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே இக்கலை வளர்ந்து வருகின்றது. மனிதன் நாகரீகத்தையும் அதன் வளர்ச்சியையும் எடுத்துக்காட்டும் சான்றுகளில் சிற்பக்கலையைவிட சிறந்தது வேறொன்றும் இல்லை. தமிழ்நாடுகளின் தொன்மை வரலாற்றை சிற்பக்கலை வழியாக பெரிதும் அறிய முடிகின்றது.*

**துணைநூற்பட்டியல்**


1. *தமிழர் வளர்த்த அழகுக் கலைகள், மயிலை சீனி வேங்கடசாமி, மணிவாசகர் பதிப்பகம், சென்னை. முதற்பதிப்பு ஆகஸ்ட் - 2002.*
2. *தொல் தமிழர் வரலாறும் பண்பாட்டு ஆய்வுகளும், சி. இளங்கோ, அலைகள் வெளியீட்டகம், 2015.*
3. *நாயக்கர் கால கலைக் கோட்பாடுகள், சா. பாலுசாமி, காலச்சுவடு பதிப்பகம், 2013.*
4. *மகாபலிபுரத்து ஜைன சிற்பம், மயிலை சீனி வேங்கடசாமி, ஜைனசலகம், சென்னை. 1974.*
5. *ஆய்வுக்கதிர், சென்னை பல்கலைக்கழகம், பன்னாட்டு கருத்தரங்கம், மெய்யப்பன் பதிப்பகம், 2006.*


## References


1. Mayilai Seeni Venkatasamy, Tamil Valartha Azhagu Kalaigal, Manivasagar Publications, Chennai - 600 108, First Edition August 2002.
2. Elango, C., Thol. Tamilar Varalarum Panpattu Aaivugalum, Waves Publishing House, 2015.
3. Nayakar Kaala Kalai Kotpadugal, S. Balusamy, Kalachuvadu Publications, 2013.
4. Mayilai Seeni Venkatasamy, Mahabalipurathu Jaina Sirppam, Jainasalagam, Chennai, 1974.
5. Aaivu Kathir, University of Madras, International Symposium, Meiyappan Publications, 2006.